கழகத் துணைப் பொதுச் செயலாளர், வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்களை பொறியாளர் அணியின் விழுப்புரம்,கடலூர், புதுச்சேரி மண்டல பொறுப்பாளராக பொறுப்பேற்றுள்ள மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் சி.பிரதீப் சந்தித்து வாழ்த்து பெற்றார்.உடன் விழுப்புரம் தெற்கு மாவட்ட பொறியாளர் அணி நிர்வாகிகள் அமைப்பாளர் புகழ் செல்வகுமார்,தலைவர் எஸ்.சுரேஷ்,துணைத் தலைவர் வி.கிருஷ்ணமூர்த்தி, துணை அமைப்பாளர்கள் துரை ஸ்டாலின், எம்.பிரசாத், டி.டி.செந்தில்குமார், பி.ஆனந்தகுமார்,ஏ. ரீகன்ராஜ் உள்ளிட்டோர் உள்ளனர்.

திருவள்ளூர் மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் திருவள்ளூர் மாவட்ட பிரிவின் சார்பில் பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் முன்னிட்டு மாரத்தான் போட்டியினை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள். உடன் திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, திருவள்ளூர் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சசிகாந்த் செந்தில், பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் துரை சந்திரசேகர், மாவட்ட வருவாய் அலுவலர் ஆ.இராஜ்குமார், நகரக் கழகச் செயலாளர் சி.சு. ரவிச்சந்திரன், நகர் மன்ற தலைவர் உதயமலர் பாண்டியன், மாநில மாணவரணி இணைச் செயலாளர் ஜெரால்டு, ஒன்றிய கழகச் செயலாளர் ஆர்.ஜெயசீலன், எஸ்.மகாலிங்கம், சே.பிரேம் ஆனந்த், மற்றும் கழக நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

சட்டசபையில் நடந்த நிகழ்வுகளுக்கு

ஆளுநர் ஆர்.என்.ரவி மன்னிப்பு கேட்க வேண்டும்!

அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் பேட்டி!

சென்னை, ஜன.07-

தேசிய கீதத்தை அவமதிக்கும் எண்ணம் தமிழ்நாடு அரசுக்கு எப்போதும் இருந்தது இல்லை என்று அமைச்சர் சிவசங்கர் கூறியுள்ளார்.

இந்த ஆண்டின் முதல் சட்டசபை கூட்டத்தொடர் தொடங்கி நடைபெற்றது. இந்த முதல் கூட்டத்தில் கவர்னர் ஆர்.என்.ரவி உரை நிகழ்த்த இருந்தார். இந்த நிலையில் சட்டசபைக்கு வந்த சிறிது நேரத்தில், உரையாற்றாமல் அவையில் இருந்து கவர்னர் புறப்பட்டு சென்றார். இதனால், அவையில் பரபரப்பு ஏற்பட்டது.

கூட்டத்தொடர் தொடங்குவதற்கு முன்பு தேசிய கீதம் பாட வேண்டும் என்று கவர்னர் ஆர்.என்.ரவி கூறியுள்ளார். ஆனால் தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்பட்டுள்ளது. இதற்கு அதிருப்தி தெரிவித்து கூட்டம் தொடங்கிய 3 நிமிடத்தில் சட்டசபையில் இருந்து கவர்னர் ஆர்.என்.ரவி புறப்பட்டுச் சென்றார். இந்த நிலையில் தமிழக சட்டமன்றத்தின் மரபுகளை மாற்ற கவர்னர் முயற்சிக்கிறார் என்று அமைச்சர் சிவசங்கர் கூறியுள்ளார்.

சட்டப்பேரவை வளாகத்தில் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் கூறும் போது, “அரசின் சாதனைகளை வாசிக்க மனமில்லாமல், ஒரு நாடகத்தை கவர்னர் அரங்கேற்றி உள்ளார். கவர்னர் உரையை வாசித்தால் அரசின் சாதனைகளை அடுக்க வேண்டியிருக்கும் என்பதால் அவர் புறக்கணித்துவிட்டார். நாட்டுப்பற்றுக்கு அவர்கள் தான் குத்தகைதாரர்கள் என்பதுபோல் நடந்து கொள்கின்றனர்.

தமிழ்நாடு சட்டசபையில் முதலில் தமிழ்த்தாய் வாழ்த்தும், இறுதியில் தேசிய கீதமும் பாடுவதுதான் மரபு. தேசிய கீதத்தை அவமதிக்கும் எண்ணம் தமிழ்நாடு அரசுக்கு எப்போதும் இருந்தது இல்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை விட தான் பெரியவர் என்ற மனநிலையில் கவர்னர் செயல்படுகிறார். தமிழ்நாடு சட்டமன்றத்தின் மரபுகளை மாற்ற கவர்னர் முயற்சிக்கிறார். சட்டசபையில் நடந்த நிகழ்வுகளுக்கு கவர்னர் மன்னிப்பு கேட்க வேண்டும். தேசிய கீதம் பாடும்வரை காத்திருக்காமல், தேசிய கீதத்தை அவமதித்ததே கவர்னர் ஆர்.என்.ரவிதான்” என்று கூறினார்.

இவ்வாறு அவர் பேட்டியளித்தார்.

தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவியைக் கண்டித்து

திருவள்ளூர் கிழக்கு மாவட்டக் கழகம் சார்பில் ஆர்ப்பாட்டம்!

மாவட்டச் செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. அறிக்கை!

திருவள்ளூர், ஜன. 7 -

திருவள்ளூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் டி.ஜே.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு: -

தமிழ்நாட்டையும், தமிழ்த்தாய் வாழ்த்தையும் தொடர்ந்து அவமானப்படுத்தும் ஆளுநரைக் கண்டித்தும், ஒன்றிய அரசின் ஏஜெண்ட்டாக தமிழ்நாட்டின் உரிமைகளில் அத்துமீறல்களைச் செய்யும் ஆளுநரைக் காப்பாற்றிடவும்,

ஒன்றிய அரசின் மீதுள்ள தமிழ்நாட்டு மக்களின் கோபத்தை திசைமாற்றவும் வித்தைகளைச் செய்யும் அதிமுக பாஜக கள்ளக் கூட்டணியைக் கண்டித்தும், திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக சார்பில் பொன்னேரி ஹரிஹரன் பஜார் வீதியில் அருகில் நாளை 07.01.2025 செவ்வாய்க்கிழமை, காலை 10.00 மணியளவில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய கழக நகர கழக பேரூர் கழக செயலாளர்கள், அனைத்து உள்ளாட்சிப் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் தலைவர்கள், துணை தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள்,

ஒன்றிய கழக நகரக் கழக, பேரூர் கழக, நிர்வாகிகள், அனைத்து கழக செயல் வீரர்கள், அனைத்து கழகத் தொண்டர்கள் தவறாமல் பங்கேற்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் டி.ஜே.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தமிழர் திருநாள் மற்றும் தமிழ் புத்தாண்டு நாளையொட்டி, சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம்விளக்கு மேற்கு பகுதி 110வது வார்டில் பணிபுரியும் முன்களப் பணியாளர்களான தூய்மை பணியாளர்கள், மின்துறை ஊழியர்கள், சுகாதாரத்துறை ஊழியர்கள், குடிநீர் வாரிய ஊழியர்கள், கழிவுநீர் அகற்று வாரிய ஊழியர்கள் மற்றும் துப்புரவு பணியாளர்களுக்கு மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு ஏற்பாட்டில் புடவை, வேஷ்டி, சட்டை மற்றும் 2025-ஆம் ஆண்டுக்கான நாள்காட்டிகள் பொங்கல் விழாகால நலத்திட்டமாக வழங்கப்பட்டு, வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது. உடன் ஆயிரம்விளக்கு மேற்கு பகுதி செயலாளர் வினோத் வேலாயுதம், மாவட்ட நிர்வாகிகள் து.விக்டர், எ.சங்கீதா, அகஸ்டின்பாபு, வட்டக் கழகச் செயலாளர்கள் த.குணசேகரன், கே.எஸ்.தினேஷ் பிரபு, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் ச.அசோக்குமார், மு.சீனிவாசன், திருமலை பொண்ணுரங்கம் மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

ஆர்.எம்.லட்சுமிவேலு நிகழ்ச்சி ஏற்பாடு: கனிமொழி கருணாநிதி எம்.பி. பிறந்த நாள்:

சென்னை வடகிழக்கு மாவட்ட மகளிரணி சார்பில் அறுசுவை உணவு வழங்கல்!

மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. தலைமை!

சென்னை, ஜன.7

சென்னை வடக்கு மாவட்டம் மகளிரணி சார்பில் ஜனவரி 5-ல் பிறந்தநாள் காணும் கழக துணைப் பொதுச்செயலாளர் கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி பிறந்தநாள் விழாவை முன்னிட்டு அறுசுவை உணவு வழங்கும் விழா நடைபெறுகிறது.

சென்னை வடக்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் ஆர்.எம்..லட்சுமிவேலு இன்று (07.01.2025 செவ்வாய்கிழமை) மாலை 04.00 மணியளவில் மணிகர் சத்திரம் முதியோர் இல்லம் ஸ்டான்லி மருத்துவமனை எதிரில் சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. தலைமையில், தலைமை செயற்குழு உறுப்பினர் சென்னை பல்கலைகழக ஆட்சி மன்றக்குழு உறுப்பினர் ஐட்ரீம் இரா. மூர்த்தி எம்.எல்.ஏ., இளைஞரணி மாவட்ட அமைப்பாளர் ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபிநேசர், தலைமை செயற்குழு உறுப்பினர் நகர அமைப்பு குழு தலைவர் தா.இளையஅருணா, வ.பெ.சுரேஷ், இரா.செந்தில் குமார், இரா.லட்சுமணன், எஸ்.ஜெபதாஸ் பாண்டியன், க.ஜெயராமன், அ.முருகன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

பா.வேளாங்கண்ணி எம்.சி., ஆர்.குருவம்மாள், ஜே.மகேஸ்வரி, மேகலா, திருமலை, எம்.சுசிலா, எம்.கலைவாணி, கோமதி பொற்செழியன், பவித்ரா, நரேஷ்குமார் எம்.சி., சம்பத் குமாரி நெடுஞ்செழியன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

மாநில அயலக அணி தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., மகளிர் அணி மாநில தலைவர் விஜயா தாயன்பன் , மகளிர் அணி செயலாளர் ஹெலன் டேவிட்சன், மாநில தொண்டரணி செயலாளர் நாமக்கல், ராணி மாநில இணைச்செயலாளர் குமரி விஜயகுமார், பிரச்சார குழு செயலாளர் ராணி ரவிச்சந்திரன், சமூக வளைதள பொறுப்பாளர் ரத்னா லோகேஷ், சேலம் முன்னாள் மேயர் சமூக வளைதள பொறுப்பாளர் சமூக வலைதள பொறுப்பாளர் டாக்டர் யாழினி ரேகா பிரியதர்ஷினி ஆகியோர் உணவு வழங்குகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் ந.மனோகரன், இரா.கருணாநிதி, இரா.நரேந்திரன், ஆ.சுபேர்கான், பி.டி.பாண்டிச்செல்வம், ந.மருதுகணேஷ், இரா.வெற்றிவீரன், மு.கோபி, க.நாகம்மை எஸ்.ஆர்.கமலக்கண்ணன், வி.தயாளன், கி.ராஜேந்திரன், ந.சண்முகம், வே.சிவக்குமார், கீதாசுரேஷ், எம்.சி.வி.விஜயலஷ்மிவிஜயகுமார், எம்.சி.வெ.சு. , எம்.தீனதயாளன், டி.சுரேஷ், கார்த்திக் செங்குட்டுவன், பி.செந்தில்குமார், வி.வி.ரமேஷ், ஏ.டி.மணி, ஏ.ரமேஷ் பாபு, கட்பீஸ் பி.சோமசுந்தர மூர்த்தி, கே.மதன், ஆர்.பொன்இளவரசன், க.கோவிந்தசாமி, ஜே.கே.நாதன், எஸ்.குமரன், ர.இர்பான், சிவா, கோ.வேல்மணி, கோ. அரிஸ்குமார், சுவிஸ், இளையராஜா, தா.ரவி, சுஜாவுதின், ஜி.தனசேகர், செந்தில்குமாரா, லியாகத் அலி, கே.முனுசாமி, ஆர்.பி.சேகர், எஸ்.கே.செந்தில், எம்.கே.இஸ்மாயில் கு.ரமேஷ் எஸ்.திருஞானம் , வி.மலையம்மாள் இ.மதன் த.ஜெயபாலன் பி.சேகர் கு.சுந்தர் லோ.மோகன் பி.ஜெயலட்சுமி க.கலைச்செல்வன் காட்டன் ஜி.சதீஷ்குமார் ஆர்.வி.கணேஷ் என்.கிருஷ்ணன் க.கோவிந்தராஜ் பி.கண்ணன் இரா.பாலன் எம்.ரவி கோரியர்.பி.முருகன் பாலாலட்சுமணன் ஜே.கௌரீஸ்வரன் இரா.பொன்முடி எஸ்.யுவராஜ் ந.குமார் எம்.பாலாஜி ஆர்.டி.ஜெய்சங்கர் எஸ்.முகம்மது மொய்தீன் ஏ.அன்வர் எம்.பாலசுப்பிரமணியன் ந.ம.திநேஷ்குமார் டி.ஏ.மோகனகுமரன் ஜே.தரணி க.ஜெயசீலன் பி.ஷாஜகான் ஆர்.பிருந்தா ஆர்.சரசா கோ.நித்தியானந்தம் ந.மணிமாறன் என்.ஹயாத் பாஷா எஸ்.தங்கவாசுகி என்.சிவகுமார் பல்சர்.பி.பாலாஜி டபிள்யூ.எஸ்.ரவிச்சந்திரன் பாபா.ஜி.சீனிவாசன் சி.சின்னராஜ் கே.குணசேகரன், ஆ.வேளாங்கண்ணி லூர்தமார்டின் லாரன்ஸ் மோசஸ் கயல்விழி பன்னீர் செல்வம் மலர் இளங்கோவன் வினோத்குமார் கலந்துகொள்கின்றனர்.

52வது வட்டச் செயலாளர் எஸ்.புகழேந்தி நன்றி கூறுகிறார்.

காஞ்சிபுரம் மாவட்டம் ஆலந்தூர் தெற்குப் பகுதியில்

ஆளுநர் ஆர்.என். ரவியை கண்டித்து ஆர்ப்பாட்டம்!

சுப.வீரபாண்டியன் கண்டன உரையாற்றுகிறார்!

பகுதிச் செயலாளர் என்.சந்திரன் எம்.சி. அறிக்கை!

சென்னை,ஜன.7-

ஆலந்தூர் தெற்கு பகுதி கழக செயலாளர் - மண்டலக்குழுத் தலைவர் என்.சந்திரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு சட்டமன்றத்தையும், தமிழ்தாய் வாழ்த்தையும், அவமதித்த தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவியை வை கண்டித்து காஞ்சி வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன் ஆணைக்கிணங்க (07.01.2025) இன்று (செவ்வாய்க்கிழமை) காலை 9:00 மணியளவில், பல்லாவரம்-கண்டோன்மெண்ட் திருமண மண்டபம் அருகில் (பழைய காவல் நிலையம் பின்புறம்), மாபெறும் கண்டன ஆர்பாட்டத்தில் திராவிட இயக்க தமிழர் பேரவை தலைவர் சுப.வீரபாண்டியன் அவர்கள் கண்டன உரையாற்றுகிறார்.

எனவே ஆலந்தூர் தெற்கு பகுதிகுட்பட்ட பொதுக்குழு உறுப்பினர்கள்,மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், பகுதி நிர்வாகிகள்,வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி பிரதிநிதிகள், வட்ட நிர்வாகிகள், பகுதிவட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக தோழர்கள், கண்டன ஆர்பாட்டத்தில் தவறாமல் கழக இருவண்ண கொடிகளுடன் கலந்து கொள்ளுமாறு கேட்டு கொள்கிறேன்...

இவ்வாறு 12வது மண்டல குழு தலைவர் - ஆலந்தூர் தெற்கு பகுதி கழக செயலாளர் என்.சந்திரன் தெரிவித்துள்ளார்.

சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர். டி.சேகர். அறிவுறுத்தலின்படி சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா. மூர்த்தி, தொகுதி பார்வையாளர் டாக்டர் சுபேர் கான் ஆலோசனைப்படி 49 வட்டத்துக்கு உட்பட்ட அனைத்து பாகங்களிலும் இல்லந்தோறும் இளைஞரணி உறுப்பினர் சேர்த்தல் நிகழ்ச்சி வட்ட கழக பொறுப்பாளர் க. கலைசெல்வன் ஏற்பாட்டில் பொதுக்குழு உறுப்பினர் வே.சிவகுமார் இளைஞரணி, மாவட்ட துணை அமைப்பாளர் லயோலா கே.மதன் முன்னிலையில் ராயபுரம் கிழக்குபகுதி செயலாளர் இரா.செந்தில்குமார் துவக்கிவைத்தார். இந்நிகழ்ச்சியில் முன்னாள் வட்ட செயலாளர் எல். சீனிவாசன்,மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் எம்.டி. மதன்குமார்,பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் அப்துல் மாலிக், வட்ட கழக நிர்வாகிகள் எம்.வி.நரசுமணி, அ.குமார், கே.ஆர்.கோபிநாத், பகுதி பிரதிநிதிகள் ஜி.கோதண்டன், த.கு.பன்னீர்செல்வம், பா.சுதாகர், கே. பாஸ்கர், பாகமுகவர்கள் வி.கலைச்செல்வன், எஸ்.சங்கர், ஜி.விநாயகமூர்த்தி, ப.நிதீஷ்குமார், ரேவதி முத்துக்குமார், அ.அரசு, சின்னசாமி,த.பாலாஜி, இளைஞரணி சார்ந்த கே.வி.தனுஷ்,எம்.சாகர், கே.சதீஷ், சி.கணேஷ்குமார்,எஸ். சரவணன்,அம்பிகாபதி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

நாகை மாவட்ட திமுக சார்பில்

கழக இளைஞர் அணி செயலாளர் , தமிழ்நாடு அரசு துணை முதலமைச்சர்

மாண்புமிகு **இளந்தலைவர்** அவர்களின்

பிறந்தநாள் விழா

பொதுக்கூட்டம் மற்றும் தெருமுனை பிரச்சாரக்கூட்டம்

வ.எண்	நாள்	இடம்	பேச்சாளர் பெயர்	இளம் பேச்சாளர்
1	09.01.2025	வேதாரண்யம் கிழக்கு ஒன்றியம்	போடி.காமராஜ்	அருண்குமார்
2	09.01.2025	தலைஞாயிறு ஒன்றியம்	முனைவர். பொன்னேரி சிவா	விஜயலெட்சுமி
3	09.01.2025	நாகை வடக்கு ஒன்றியம்	சைதை சாதிக்	கல்பனா
4	09.01.2025	திட்டச்சேரி பேரூர்	சிவாஜி கிருஷ்ணமூர்த்தி	தினேஷ் பாபு
5	09.01.2025	கீழ்வேளூர் தெற்கு ஒன்றியம்	கந்திலி கரிகாலன்	பிரித்தி
6	09.01.2025	கீழையூர் மேற்கு ஒன்றியம்	பவானி கண்ணன்	அகிலா
7	09.01.2025	வேளாங்கண்ணி பேரூர்	திருவெற்றியூர். கருணாநிதி	கனிமொழி
8	10.01.2025	நாகை நகரம்	சிவாஜி கிருஷ்ணமூர்த்தி	தினேஷ் பாபு
9	10.01.2025	வேதாரண்யம் நகரம்	மன்னை சோம.இளங்கோவன்	பிரித்தி
10	10.01.2025	தலைஞாயிறு பேரூர்	சேலம். சுஜாதா	தீன்ஷா
11	10.01.2025	வேதாரண்யம் மேற்கு ஒன்றியம்	பசும்பொன் ரவிச்சந்திரன்	விக்னேஷ்வரி
12	10.01.2025	திருமருகல் தெற்கு ஒன்றியம்	தூத்துக்குடி.சரத்பாலா	ஷிவானா மரியம் பீவி
13	10.01.2025	நாகூர் நகரம்	சைதை சாதிக்	அகிலா
14	10.01.2025	கீழ்வேளூர் வடக்கு ஒன்றியம்	குடியாத்தம் புவியரசி	அருண்குமார்
15	10.01.2025	கீழையூர் கிழக்கு ஒன்றியம்	பவானி கண்ணன்	சுக நிலவன்
16	10.01.2025	நாகை தெற்கு ஒன்றியம்	கரூர். முரளி	சின்மகி
17	10.01.2025	கீழ்வேளூர் பேரூர்	நாகை. நாகராஜன்	பிரபாகரன்

குறிப்பு : திருமருகல் வடக்கு ஒன்றியத்தில் மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அவர்கள் கலந்து கொள்ள இருப்பதால் தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

என்.கௌதமன்
மாவட்ட கழக செயலாளர், நாகை மாவட்ட திமுக

© GS Designs